செ. கு. எண்: 083 நாள் :11.06.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை -11.6.2016

சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம், கொருக்குப் பேட்டை ரயில்வே காலனியில் இன்று அதிகாலை (11.6.2016) ஏற்பட்ட தீ விபத்தில் மூன்று குடிசை வீடுகள் எரிந்துவிட்டன என்ற செய்தியை அறிந்து நான் வருத்தமடைந்தேன்.

வீடு எரிந்ததால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக ஐந்து ஆயிரம் ரூபாய் மற்றும் 10 கிலோ அரிசி, வேட்டி, சேலை ஆகியவற்றினை நிவாரண உதவியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த தீ விபத்து குறித்த செய்தியை நான் அறிந்தவுடன் சம்பவ இடத்திற்கு உடனடியாக சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறவும், நிவாரண உதவிகளை வழங்கவும் வருவாய்த் துறை அமைச்சர் திரு ஆர். பி. உதயகுமார், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெரம்பூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. பி. வெற்றிவேல் ஆகியோருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9